News
aperin Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

விரோதிவருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஆவணி மீ ௩௨ (1947 ஆகஸ்ட் 19 செவ்வாய்க்கிழமை) [இல ௩அ

## ஆரியமணி அரவிந்தர்

### மஹாகவி, தேசாபிமானி, தீர்க்கதரிசி, பூரணயோகி

(க. இராமச்சந்திரன்)

வைகாசி விசாகம் எவ்விதம் புத்தமதத்தினருக்கு எவ்வழியில் புனிதம் வாய்ந்ததாகுமோ, அதேவிதத்தில்ஆகஸ்ற்15வ பாரதநாட்டு மக்களனைவர்க்கும் மூவிதத்தில் விசேடித்தநாளாகும். விசாகத்தில்புத்தர்பிறந்தார்; விடுதலை (நிர்வாணநிலை) யடைந்தார்: உடலை வீழ்த்தி மறைந்தார். அதேபோல, ஆகஸ்ற் பதினைந்தானது பாரதநாட்டின் அருந்தவச் செல்வரான அரவிந்தர் அவதரித்த நன்னாள்; அத்தேசம் விடுதலையடைந்த நன்னாள்; அந்த விடுதலைக்கு அயராதுழைத்த காந்தியடிகளின் வலக்கரம்போலிருந்து தொண்டாற்றிய ஸ்ரீ மகாதேவதேசாயின் உடல்மறைந்தநாள். இங்கே குறிப்பிட்ட பிறப்பையும் இறப்பையும் நன்றியோடு கூடிய நினைவில் வைத்தே இன்றைய தினத்தை தேசியத்தலைவர்கள பாரத நாட்டின் விடுதலைநாளாகத் தெரிந்தெடுத்திருக்கவேண்டும்.

இவ்வண்ணம் முப்பெருமை யடைந்த இந்த நன்னாளில் பகவான் அரவிந்தரின் வாழ்க்கையைப்பற்றியும் அவரது பூரணயோகத்தைப்பற்றியும் சிந்தித்தல் யாவர்க்கும் நற்பயன் அளிப்பதாகும். இந்தியாவின் விடுதலையென்ற விஷயத்தை அரவிந்தரின் வாழ்க்கையிலிருந்து பிரித்தெடுக்கவே முடியாது. பாரதமாதாவின் விடுதலை மூலம் உலகுக்கு விடுதலை காட்டவேண்டுமென்பதே அவரின் தவத்தின் நோக்கமாகும். சென்றமுப்பது ஆண்டுகளாக இந்தியாவில் நடந்த நிகழ்ச்சிகளெல்லாம், உற்றுரையும அரசியலையுந் துறந்து புதுவையில் தனிமோன தவங்கோரிச் செல்லுமுன தம்நாட்டு மக்களுக்கு, 1909ம் ஆண்டு ஆடிமாசத்தில், விடுத்த பகிரங்கக் கடிதத்தில், அடங்கியனவேயாம். 'தன்னுதவி' 'பஹிஷ்காரம்' 'ஒத்துழையாமை' "சாத்வீக எதிர்ப்பு" என்று யாம் பின்னாளில் கேள்விப்பட்ட பதங்களெல்லாம் அவரது திர்க்கதரிசன வாக்குகளால் அக்கடிதத்தில் அமைந்தனவேயாம். 'பிரதிநிதித்வமில்லையேல், வரியில்லை, என்ற பதினெட்டாவது நூற்றாண்டு அமெரிக்கஅரசியல்வாசகத்தைப்பின்பற்றி, "உரிமையில்லையேல் ஒத்துழைப்பில்லை' என்ற சுருதிவாக்கியத்தை இருபதாம் நூற்றாண்டு இந்தியாவில் முதல் முதலாக விளக்கியவர் அவரே. அம்மட்டோ! "பெரிய இயக்கங்களெல்லாம் கடவுளால் அனுப்பப்பட்டு அவனுடைய மஹாசக்திக்கு இணங்கிய தலைவனுக்காகவே காத்துக்கொண்டிருக்கின்றன. அவன் வந்தபோது அவை முன்னேறி வெற்றியுடன் நிறைவேறுகின்றன. ஆகையால் துயரிடை அமைதியாய், தோற்றாலும், உறுதிமாறாதவர்களாய் எதிர்பார்த்த தெய்வபுருஷன் வருமட்டும் பொறுத்திருக்கவேண்டும். முடிவில் விடுதலையும வெற்றியும் வரும" என்று அவர் முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன்னரேயே காந்தியடிகள் தேசத் தலைவராய் தோன்றி பாரததேசத்தை விடுதலையாக்கப் போவதையும் அழகாகக் காட்டியுள்ளார்.

மேற்கும் கிழக்கும் இணைந்த இருகலைப்புலவரான அரவிந்தர் தோன்றியது ஐரோப்பிய நாகரீகத்தில் அமிழ்ந்திய டக்ரர் கிருஷ்ணதனகோஷ் (M. D) பாரததர்ம ஆவேசப் பெரியாரான ரிஷி ராஜநாராயணபோஸ் என்ற அறிஞரின் மூத்தமகளான சுவர்ணலாதா தேவியுடன் நடாத்திய இல்லறத்திலாகும். அரவிந்தர் அவர்கட்கு மூன்றாவது குழந்தையாகும், பிறந்தநாள் ஆங்கிரசவருஷம் ஆவணி மாதம், முதலாந்திகதி (15-8-1872) வியாழக்கிழமை, கடகலக்கினமும் மூலநட்சத்திரமும் பொருந்திய வேளையாகும்.

உடை, நடை, பாவனை யெல்லாவற்றிலும் ஆங்கிலமோகங்கொண்ட டக்ரர் கிருஷ்ணதனகோஷ் தமது மக்கள் மூவரையும் சிறுவயதிலேயே இங்கிலாந்துக்கு அழைத்துச்சென்று அவர்களின் கல்விப்பொறுப்பைமாஞ்செஸ்ரரிலிருந்த ஒரு பாதிரியாரிடம் ஒப்படைத்துத் திரும்பினார். அப்போது அரவிந்தருக்கு வயது ஏழு. அடுத்த பதினான்கு ஆண்டுகளையும் இங்கிலாந்திலேயே கல்வியில் கழித்தார். ஆங்கிலத்துடன், லத்தீன், கிரீக இருமொழிகளிலும் விற்பன்னராகி, வெகுமானம் பெற்று, இலக்கியத்தில், முதல்தரமாகத் தேறினார். பிதாவிரும்பியதுபோல் ஐ. ஸி எஸ். (I. C. S) பரீட்சையிலும் சித்திபெற்றார்; ஆனால் சேரவில்லை. 1893ம் ஆண்டில் பரோடா மகாராஜாவின் உறவு கிடைத்தது; அவருடன் தாய்நாடு திரும்பினார். பிரயாணத்திற்கு முதலில் ஒழுங்குசெய்த கப்பல் தவறிப்போக, அடுத்த கப்பலில் வந்தார். இந்த மாற்றம் தந்தைக்கு அறிவிக்கவில்லை. முதல் கப்பல் லிஸபனுக்கருகே கடலில் மூழ்கிப்போன செய்தி கிடைத்ததும் டக்றர் கிருஷ்ணதன கோஷ்தன் மகனும் மாண்டானென்ற ஏக்கத்தால் மடிந்தார். தாயார் அதற்குமுன்னரே மறைந்துவிட்டார்

1893ம் ஆண்டு தொடக்கம் 1906ம் ஆண்டு வரைக்கும் பரோடா சமஸ்தானத்தில் உத்தியோகம் பார்த்து வந்தார். மாதம் ரூ. 750 சம்பளம் பெற்றபோதிலும், மிக எளிய வாழ்வையே நடாத்தினார். பதினான்கு ஆண்டுகள் இங்கிலாந்தில் வசித்தவர் என்ற அடையாளம் சிறிதேனும் அவரிடம் தென்படவில்லை. ஆங்கில-லத்தீன்-கிரீக் கலையில் திளைத்த அவர் உள்ளத்திற்கு பாரதநாட்டின் தெய்வக்கலையை, ஞானபொக்கிஷத்தை சுவைத்துப் பரவசமடையும் பாக்கியம் சீக்கிரத்தில் கிடைத்தது. தக்க ஆசாரியர்களை நியமித்து வடமொழி வங்காளம், முதலாய பாஷைகளில் புலமைபெற்றார். அழகிய ஆங்கில மொழிபெயர்ப்புகளுஞ் செய்து தாய்

தொடர்ச்சி 3ம் பக்கம்

### பிரார்த்தனை

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னை பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தேன் சிந்தையுட் புகுந்து பூங்கழல் காட்டிய பொருளே
தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தி செல்வமே சிவபெரு மானே
ஈசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந் தருளுவ தினியே.

—மணிவாசகர்

## அரிசி நிலை

### விநியோக அளவு அதிகரியாது

இப்போது ஆள் ஒன்றுக்கு ஒரு படியரிசி விகிதம் விநியோகிக்கப்படுகிறது. இந்த விநியோக அளவை $1\frac{1}{2}$ படியாக அதிகரிக்கலாமோ என்று அதிகாரிகள் சிலகாலமாக ஆலோசித்து வந்தனர். அப்படி விநியோக அளவு அதிகரிக்கப்பட்டால் இலங்கை முழுவதும் உதவ, மாதம் ஒன்றுக்குக் குறைந்தபட்சம் 30 ஆயிரம் தொன் அரிசி தேவைப்படும். சமீபத்தில் இலங்கையில் பெய்த மழைகாரணமாக நெற்பயிர்கள் சேதமடைந்துவிட்டன. இக்காரணம்பற்றி அரிசி விநியோக அளவை இப்போது அதிகரிக்கமுடியாதென்று உணவுப்பகுதி அதிகாரி ஒருவர் கூறுகிறார். இலங்கைக்கு இந்த மாதத்தில் 18000 தொன் அரிசி பர்மாவிலிருந்து கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பர்மாவிலிருந்து இலங்கை சம்பா அரிசியை எதிர்பார்கக முடியாதாம். ஆனல் அடுத்த ஆண்டில் பர்மாவிலிருந்து சம்பா அரிசி கிடைக்கக்கூடும்.

## இலங்கையின் சுயராஜ்யம்

லண்டனில் நிகழ்ந்த சாம்ராஜ்ய மகாநாட்டுக்கு இலங்கையின் பிரதிநிதியாகச்சென்ற மிஸ்ரர் எல். எம். டீ டி. சில்வா சென்றவாரம் கொழும்புக்கு மீண்டுவிட்டார். இலங்கையின் சுயராச்சியம் விஷயமாக பிரிட்டிஷ் அரசாங்கம் சிரத்தை எடுக்கிறது என்றும் கூடிய சீக்கிரத்தில் டொமினியன் அந்தஸ்து என்னும் சுயராச்சியம் இலங்கைக்குக் கிடைத்துவிடு மென்றும் மிஸ்ரர் சில்வா ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினர்.

"டொமினியன் அந்தஸ்துக்கும் பூரண சுயராச்சியத்துக்கும் எவ்விதமான பேதமும் இல்லை. ஆகவே இலங்கைககு டொமினியன் அந்தஸ்துக் கிடைக்குமானல் அது வரவேற்கப் படத்தக்கதாகும்" என்று மிஸ்ரர் சில்வா கூறினர்.

## சிங்களர்-தமிழர் ஒற்றுமை

### நாமக்கல் கவிஞரின் வேண்டுகோள்

"இந்த இலங்கையிற் சிங்களர் தான்பெரும்பான்மையினர்; எனவே அவர்களுக்குரிய உரிமைகளை ஆட்சேபிக்கமுடியாது, சிங்களரும் சிறுபானமையினரின் நிலைமையை உத்தேசித்து அவர்களுக்கு வேண்டிய போதியபாதுகாப்புககள் அளிப்பரென்று எண்ணுகிறேன்."

என்றிவ்வாறு சென்றவாரம் தமக்குக் காலியில் அளிக்கப்பட்ட ஓர் வரவேற்புபசாரத்துக்குப்பதிலிறுத்த நாமக்கல் கவிஞர் திரு. வெ. ராமலிங்கம்பிள்ளை கூறினர். இந்த வரவேற்புக் கூட்டத்துக்குக் காலி மேயர் மிஸ்ரர் விஜயகுலசூரியா தலைமை வகித்தார்.

தலைவர் தமது முன்னுரையில், இலங்கையையும் இந்தியாவையும் ஓர்சில சந்தர்ப்ப வாதிகள் பிரித்துவைக்க எண்ணியபோதிலும், இலங்கை இந்தியாவின் ஓர் பாகமாகத்தான் இருந்துவரும் என்று குறிப்பிட்டு, நாமக்கல் கவிஞர்போன்ற தேசாபிமானிகள் வருகையால், இரு நாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்பு அதிகமாகும் என்று கூறினர்.

தமக்கு அளித்த வரவேற்புக்கு நன்றிகூறி, நாமக்கல் கவிஞர் பின்வருமாறு தெரிவித்தார்:

"காலித் தமிழர்சங்கத்து ஆதரவில் நிகழ்ந்த இந்த வரவேற்புக் கூட்டத்தில் ஓர் சிங்களப்பெருமகன் தலைமை வகிப்பதும், சிங்களமக்களிற் பெருந்தொகையானோர் சமுகமளித்திருப்பதும், என்னை உவகைக்கடலில் ஆழ்த்துகின்றன. இந்த நாட்டிலே சிங்களர் தமிழர் வேற்றுமையுண்டென்று கூறுவதெல்லாம்முழுப்பொய்என்றே நான் இந்த வரவேற்பிலிருந்து அறிகிறேன். இந்த நாட்டில் சிங்களரும தமிழரும் ஓர்தாய் பிள்ளைபோல் இதுவரை வாழ்ந்துவந்திருக்கிறார்கள். இப்போதும் அவர்களுககிடையேபெரும் பிணக்கு எதுவுமில்லை என்பதுதான் எனது உண்மையான அபிப்பிராயம்.

"இலங்கைக்கு யார் முன்வந்தாலும் சரி, இன்று சிங்களர்தான் இந்த இலங்கையிற் பெரும்பான்மையினர் என்பதை மறுக்கமுடியாது. ஆகவே அவர்கள தங்களுடைய உரிமைகளை அநுபவிக்க முயலும்போது அதற்குத் தடைசெய்ய நினைப்பது முறையல்ல."

காலி நகத் தமிழபிமானிகளின் சார்பாக ஒரு பணமுடிப்பும் கவிஞர்க்கு வழங்கப்பட்டது.

திரு H. S. N. சர்மா B. A. அவர்கள் நன்றியுரை கூறியதோடு கூட்டம் முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ௵
ஆவணிமீ ௩௳ செவ்வாய்க்கிழமை

## இந்திய சுதந்திர வரலாறு
### I

இந்த ஆகஸ்ற்மீ 15௳ உலக வரலாற்றிலே அபூர்வமான திருநாளாகு மெனப் போற்றுதல் மிகையாகாது; எக்காலத்திலாக, இவ்வுலகி லுள்ள எந்நாடாகச் சாத்வீக முறையினல் அறுபதுக்கு மேற்பட்ட வருடகாலமாகச் சுதந்திர மடைய வேண்டுமென முயற்சி செய்து இற்றை வரையில் அச் சுதந்திரத்தைப் பெற்றதில்லை யெனலாம்; பரத கண்டத்திலே மூன்றெரு காலத்திலே பாண்டவருள் மூத்தவராகிய தருமபுத்திரர் தாம்பறிகொடுத்த நாட்டினைத் துரியோதன னிடமிருந்து தமக்கு இயல்பாக வுள்ளதாகிய சாத்வீக முறையினற் பெற முயன்றாரென்றும், கண்ணபிரானைத் தூதாக அனுப்பினு ரென்றும், கண்ணபிரானுடைய கேள்விக்கு நாகக்கொடியோன் இசையாமையினலே துரியோதனதியருக்கும் பாண்டவருக்கு மிடையே பாரதப்போர் மூண்டு பதினெட்டு நாள் வரையில் நடந்ததென்றும் பரதகண்டத்திலுள்ள மக்களுட் பெரும்பாலார் அக் காலத்தில் மாண்டன ரென்றும் பாரதம் கூறும்.

பிற்காலத்திலே அமெரிக்கர் சுயராச்சியம் பெறுதற்குப் பிரித்தானியருடன் பெருஞ்சமர் செய்தே ஈற்றிற் பெற்றனர்; அதன் பின்னர் ஐரிஸ் மக்கள் தம் நாட்டிற்குச் சுயராச்சியம் பெறும் பொருட்டு, சிலகாலம் சாத்வீக முறையை அநுசரித்தும் டப்ளின் நகரசங்கத் தலைவர் நாற்பதுநாள் வரையில் உண்ணுவிரதங் கிடந்து மாண்டும், சுயராச்சியம் பெறுதல் இயலாதாக, பின்னர் ஐரிஷ் மக்கள் டீ. வெலருவைத் தலைவராகக் கொண்டு கலகஞ் செய்தும் சமர் விளைத்துமே பிரித்தானியரிடம் சுயராச்சியத்தைப் பிடுங்கி யெடுத்தனர்.

இந்திய மக்கள் சுயராச்சியத்தைப் பிரித்தானிய ரிடமிருந்து பெறவேண்டு மென்ற எண்ணங் கொண்டது நேற்றின்றல்ல, ஐந்துவருடம் பத்து வருடத்திற்கு முந்தியல்ல; பிருத்தானியர் இந்திய நாட்டினை ஒரு பெரிய யுத்தஞ்செய்து ஏககாலத்திலே முழு நாட்டினையுங் கைப்பற்றின ரல்ல ரென்பதும், பல இராச்சியங்களாகப் பிரிந்திருந்த பாரதநாட்டைக் காலந்தோறும், நீதியாகவோ அஃதற்கு மாருகவே காரணங்காட்டி, தம் பராக்கிரமமே நீதியென்ற முறையில் மெல்ல மெல்லக் கைப்பற்றினர்; பூரண இந்தியாவும் பிரித்தானியரின் ஆளுகைக் குட்பட்ட பின்னரே பாரத மக்கள் தாங்கள் அனைவரும் ஆளப்படும் அடிமைச் சாதியின ரென்பதை அயிர்த்தார்கள்; அக்காலத்தில் ராஜா ராம் மோகன் ருய் என்னும் இந்தியத் தலைவர் இந்துமக்களுக்கு நேர்ந்த குறைகளையும், செய்ய வேண்டிய திருத்தங்களையும் நேரிற் சொல்லும்படி முதன் முதல் இங்கிலாந்திற்குச் சென்ருர். இது 1830-ம் ஆண்டுவரையில் நிகழ்ந்ததாகும்; ஆனல், ருய் அவர்கள் சென்ற விஷயத்தில் அதிக அனுகூலம் பெற்றிலர்.

அதன்பின் 1857-ம் ஆண்டிலே சிப்பாய்க் கலகம் மூண்டது; இது சமய சம்பந்தமான ஆசாரங்களுக்குப் பங்கம் நேர்ந்தமையினல் எழுந்த தெனினும், அக் காலத்தில் தம்நாட்டைப்பறிகொடுத்துவிட் டிருந்த ஜான்ஸி இராணி முதலிய சிலரும் இக் கலகத்திலே சம்பந்தப்பட்டனர்; இக் கலகம் டெல்லி, குவாலியவார் லக்னோ முதலிய ஊர்களில மிக வேகமாக நடைபெற்றது; அக் காலத்தில் இந்தியாவைப் பிடித்தாண்டு வந்த பிருத்தானிய கிழக்கிந்திய சமுதாயத்தார் இக் கலகத்தை அடக்குதற்குக் கஷ்டப்பட்டன ரெனவும், நேர்பாளத் துள்ள கூர்க்க சைநியத்தின் துணை கொண்டே அடக்கின ரென்றுஞ் சொல்லப் பட் டிருக்கின்றது. தீமையிடையே நன்மை பிறப்பது முண்டென்றபடி, இக் கலகத்தினல் விளைந்த நன்மை யாதெனில் இந்திய நாட்டின் பரிபாலனம் பிருத்தானிய கிழக்கு இந்திய சமுதாயத்தாரின் பொறுப்பிலிருந்து அகன்று, விக்ரோறிய மகாராணியாரின் பரிபாலனத்திலானது; இந்தியாவி லுள்ள சுதேச மன்னரும் அக் காலத்திலே பிருத்தானிய சக்கராதிபத்தியத்தின் கீழ்ப் பரிபாலனஞ் செய்து வரலாயினர்; இந்தியர் சுயராச்சியத்தைப் பராக்கிரமத்தினற் பெறுதற்குமுதலும்கடைசியுமாகச் செய்த கலகம் இந்த ஒன்றுமேயாம்.

சென்ற 1885-ம் ஆண்டிலேயே, இந்திய மக்களுட் கற்றவர்களும் கரும மறிந்தவர்களும் ஒருங்கு சேர்ந்த இந்திய காங்கிரஸ் மகாசபையினை திரு. W. C. பனர்ஜி என்னும் பெரியாரின் தலைமையில் பம்பாயிற் கூடினர்; அந்த நாள்தொடக்கம் 62 வருட காலமாக இந்திய மகாநாட்டினர் வருடந்தோறும் மகாநாடு கூடியும், கிளைச் சங்கங்களை ஊர்கள் தோறும் தாபித்தும் சுயராச்சியத்தின் பொருட்டு உழைத்த உழைப்பும் பட்ட கஷ்டங்களும் அடைந்த தண்டனைகளும் உயிர்ச் சேதங்களும் சற்றல்ல.

இந்திய காங்கிரசிலே காலந்தோறும் ஈடுபட்டு உழைத்தவர்களின்தொகை இவ்வள வெனச் சொல்லுதல் முடியாதாகும்; அவர்களுட் பிரதானமானவர்கள் W. C. பனர்ஜி, சுரேந்திரநாத் பனர்ஜி, ஆநந்தமோகன் போஸ், கோகலே, பாலகங்காதரதிலகர், சந்தவர்க்கார், மாளவியா, அயோத்தியநாத, டக்ரர் லடுர்ஜி, ஸேர். பிரோஸஷா மேதா, வாட்சா, தாதாபாய் நௌரோஜி விஜயராகவச்சாரியர், மோதிலால் கோஷ், ஆனந்தசாலு, செங்கு நாயர், ஸ்ரீநிவாசஐயங்கார், மோதிலால்நேரு முதலியோ ராவர் இந்திய காங்கிரசின் கொள்கையை யெடுத்துச் சனங்களுக்குப் போதிக்கவும், சுயராச்சியத்தைப் பெறும்படி பாரத மக்களை ஊக்கவும் காலந்தோறும் பல ஆங்கிலமொழிப் பத்திரிகைகளும், சுதேச மொழிகட் பத்திரிகைகளும் இந்தியா முழுவதிலுமுள்ள சிறந்த ஆசிரியர்களால் நடத்தப்பெற்று வந்தன; இப் பத்திரிகைகள் பிருத்தானியர் இந்திய மக்களுக்குச் சுயாதீன மளிக்கப் பின்னிற்கின்றனரென்பதை அச்சமின்றி முகமன் பாராது எடுத்துக் காட்டிக் கண்டிக்கத் தொடங்கியதன் பயனக, பத்திரிகைக் கட்டுப்பாட்டுச் சட்டமொன்று இந்திய அரசினராற் பிறப்பிக்கப் பட்டது; இச்சட்டத்திற்குஇரையான இந்திய ஆங்கிலப் பத்திரிகைகளும் சுதேசமொழிப் பத்திரிகைளும் மிகப்பலவெனலாம்; ஆனல் கல்கத்தாவில் அமிர்த பஸார் பத்திரிகை சென்னை ஹிந்து என்னும் ஆங்கில மொழிப் பத்திரிகைக ளிரண்டுமே இந்த ஆபத்துக்களுக்கெல்லாம் ஒருவாறு தப்பி இன்றும் நின்று நிலவலாயின;

## வெளிநாட்டில் இந்தியர்

இந்தியாவுக்கு வெளியே வதியும் இந்திய மக்களுக்கு இந்தியாவின் முதற் பிரதமர் பண்டிதர் ஜவஹர்லால்நேரு அவர்கள் விடுத்துள்ள செய்தியை அவ்வெளிநாட்டு இந்திய மக்கள் அனைவரும், அந்த அந்த நாட்டுப் பரிபாலனத்தை மேற்கொண்டுள்ள அதிகாரவர்க்கத்தினரும் படித்துக் கிரகித்துக்கொள்வர் என்று எதிர்பார்க்கிறேம் இன்று இந்திய மக்கள் ஓர் மகத்தான நிலையில் இருக்கிருர்கள். பூரண சுதந்திரம்பெற்று, ஜீவத்துவம் அடைந்துள்ள பாரதநாட்டின் பிரதிநிதிகளாக வெளிநாட்டிந்தியர்கள் இன்று மிளிர்கிருர்கள். இந்த மகத்தான நிலையில் இருந்து, அவர்கள் தங்கள் செயல்களினல், பிறழக்கூடாது என்பதே எமது வேண்டுகோளாகும். வெளிநாடுகளில் இந்தியமக்களைக் கேவலம் கூலிக்காரர்கள்எனஎண்ணி அவர்களுக்கெதிராகச் சட்டங்கள் இயற்றிவந்த ஓர் சில வல்லரசுகளுக்கும் நேருஜியின் செய்தி ஓர் எச்சரிக்கையாக இருக்கும் என்று நம்புகிறேம். தனது மக்கள் வெளிநாடுகளில் துன்புறுத்தப்படுவதை, சுதந்திர இந்தியா, சீறுகொண்டெழுந்துள்ள இந்தியா ஓர்போதும் சகிக்கமாட்டாது என்பதனை வெள்ளையர் ஆதிக்கத்தில் அதிக நம்பிக்கை வைத்துக் கிருத்திரமம் புரியும் தென் ஆபிரிக்கப் பிரதமர் ஸ்மட்ஸ் சேனுதிபதி இப்போதுதானும் உணர்ந்து, தம்முடைய கருமங்களுக்கு ஓர் முற்றுப் புள்ளி வைப்பாரேயாகுல், அவர் தமக்கும் வெள்ளையர் நாடுகளுக்கும் பெரிய சேவை செய்தவராவர் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேம் தென்னுபிரிக்கா முதலாம் நாடுகளில் இந்தியர் எய்தியுள்ள நிலையுடன் அவர்கள் இலங்கையில் அடைந்துள்ள நிலைமையை நோக்கும் போது, அது அவ்வளவு பாரதூரமானதல்லவென்பதே எமது அபிப்பிராயம். இலங்கையின் பிற்போக்கான பொருளாதார நிலைமையைக் காரணமாக வைத்துக்கொண்டு இங்குள்ள சில அரசியல்வாதிகளும், வகுப்புவாதத்தைப் பாமர மக்களிடையே தூண்டி அதன் பயனக அரசியல்மன்றங்களில் அதிகாரம வகிக்க விரும்பும் பட்டவேட்டுவர், சந்தர்ப்பவாதிகளும் ஆற்றிவந்த துர்ப்பிரசாரங்களினல் இலங்கைவாழ் இந்தியர்நிலை ஓரளவுக்கு க்ஷீணமடைந்துள்ள தென்பது உண்மையே. ஆனல் அந்த நிலையைத் திருத்தி இருநாடுகளுக்குமிடையே பரஸ்பரம் நல்லெண்ணத்தையும் உறவையும் ஏற்படுத்துதல் கஷ்டமல்ல.

இந்தஇலங்கையின் அரசியல்முன்னேற்ற விஷயத்தில் இங்குவாழ் இந்தியர் முட்டுக்கட்டையாக நிற்கின்றனர் என்ற ஓர் அபவாதம் சரியாகவோ பிழையாகவோ பரவிவருகிறது. இப்படியாக இந்த அபவாதம் பரவிவிடாதபடி பார்த்துக்கொள்ளுதல்இலங்கைவாழ் இந்தியமக்கள் முதற்கடமையாம். "உனக்கும் உன்கிளைக்கும் நாளும்உண்டியும்வாழ்வுமிங்கேமனக் கருத்தங்கே' என்றுங்குஇங்குள்ள இந்திய மக்கள், இந்நாட்டின் செல்வத்தைப் பலவகையாலும் சுரண்டித் தம் தேயங்கொண்டுசெல்கின்றனர் என்ற அபவாதத்துக்கு இடம் கொடுக்காமல். இந்த இலங்கையிலே அவர்கள் பிரஜாவுரிமை பெற விரும்பினுல், இந்நாட்டு மக்களின் வாழ்வு தாழ்வுகளிற் பங்குபற்றி, இந்நாட்டின் அரசியல் பொருளாதார விருத்திக்குத் தொண்டாற்ற வேண்டும். அப்படி அவர்கள் செய்து இங்குள்ளாரின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெறுவரேயானுல், இப்போதுள்ள இலங்கை—இந்திய பிணக்கு மிகவும் கூடிய சீக்கிரத்தில் இனிதே தீர்க்கப்பட்டுவிடும் என்பதே எமது திடமான நம்பிக்கை.

# இலங்கையின் சுயராஜ்யம்

## அடுத்த ஆண்டிற் கிடைக்குமாம்

6 மாத காலமாக இங்கிலாந்தில் லீவில் நின்ற இலங்கை நிதிக்காரியதரிசி சேர் ஒலிவர் குணத்திலகா சென்ற வியாழக்கிழமை இலங்கைக்கு மீண்டுவிட்டார்.

இலங்கையின் எதிர்காலம் சம்பந்தமாக சேர் ஒலிவர், ஓர் பத்திரிகை நிருபர்க்குப் பின்வருமாறு தெரிவித்தார்:

"நாங்கள் எதிர்பார்த்திருந்த காலத்துக்கு முந்தியே இலங்கை பூரண சுயராச்சியத்தை அடையும் என்று நான் பூரணமாக நம்புகிறேன்.

"புதிய பாராளுமன்றத் தேர்தல்கள் முடிந்து மந்திரசபை இங்கே அமைக்கப்பட்டபின், அம்மந்திரசபை, இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையே, ராணுவம் அந்நியநாட்டு வியவகாரம் சம்பந்தமான உடன்படிக்கைகளை ஆராய்ந்து அதனை ஏற்றுக்கொள்ளுமானல், வருகிற ஜனவரி மாதத்திலேயே இலங்கை பூரண சுதந்திரமடைந்துவிடும்".

இலங்கைக்கும் இங்கிலாந்துக்கும் ஏற்படும் உடன்படிக்கையில் இங்கிலாந்தின் நன்மைக்கேதுவான சில "பிடிகள்" இருப்பதாகச் சொல்லுகிருர்களே, அது உண்மைதானே என்று ஓர் பத்திரிகை நிருபர் சேர் ஒலிவரைக் கேட்டார். "இதெல்லாம் வீண் பிராந்தி; வேண்டுமென்று சிலர் இப்படி 'உம்மாண்டி' காட்டுகிருர்கள்; இலங்கைக்குப் பாதகம் விளைக்கக்கூடிய அம்சங்கள் எதுவும் இல்லை" என்று சேர் ஒலிவர் பதிலிறுத்தார்.

இலங்கையின் சுதந்திர அங்குரார்ப்பணவிழாவுக்கு அரச குடும்பத்தினர் எவராவது விஜயஞ்செய்வாரஎன்றுகேட்டதற்கு "அது ஓர் பரமஇரசியம்" என்று சேர் ஒலிவர் கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய ஜெய பாரதம்!

## இந்திய சுதந்திர அங்குரார்ப்பணம்

பாரதநாட்டில் வதியும் 40 கோடி மக்களும், சாதிமத பேதமின்றி ஜெய ஜெய வென்று கோஷிப்ப, ஆலயங்களில் மணிகள் ஆர்ப்பரிப்ப, உலகமக்கள் அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்திய சுதந்திரம் சென்ற வியாழக்கிழமை யிரவு 11 மணிக்குமேல் புதுடெல்கி நகரத்திலே அங்குரார்ப்பணமாயிற்று. அதே நேரத்திலே, ஸிந்து மாகாணத்தின் கராச்சி நகரத்திலே பாகிஸ்தான் ராஜ்யமும் உருவாகியது.

புதுடெல்கி நகரத்திலே அன்றிரவு கண்டகாட்சி கண்கொள்ளாக்காட்சியாகவிருந்தது, இந்த உலகத்திலே இப்படியான ஓர் மகத்தானகாட்சி இதுவரை நிகழவில்லை என்று பத்திரிகை நிருபர்கள தெரிவிக்கிறார்கள்.

"இதோ நள்ளிரவு; உலகமக்கள் அனைவரும் தூங்குகின்றனர். உலகம் தூக்கம்கொள்ளும் இந்தச்சமயத்திலே, எங்கள் பாரததேசம்-எங்கள் ஆரியதேசம் - எங்கள் மணித்திருநாடு இதோ கண்விழித் தெழுகின்றது. எங்கள் பாரதஅன்னை இந்த நள்ளிரவில் புத்துணர்ச்சியும், புதிய உற்சாகமும் கொண்டு பூரண சுதந்திரதேவியாய் இதோ கொலுவமர்கின்றாள். பன்னெடுங்காலமாக எம்மைப் பீடித்திருந்த தீமைகள் யாவும் இந்த நள்ளிரவுடன் எம்மைவிட்டகல, அகிலத்தரசிகள் அவையிலே எங்கள் அன்னை வீற்றிருக்கிறாள்"

என்றிவ்வாறு, பாரதநாட்டின் தவப் புதல்வன் தியாகக்கனலில் மூழ்த்தெழுந்த செல்வன், உடல் பொருள் ஆவி மூன்றையும் அன்னை பாரதியின் கழலடிக்கே அர்ப்பணஞ் செய்து உலக இன்பங்களைத் துரும்பென மதித்து, அந்தப் பாரததேவியின் சேவையையே லட்சியமாகக் கொண்ட தியாகமூர்த்தி, பாரதமக்களின் ஹிருதயாசனம் என்னும் செந்தாமரையிலும், உலகத்தடிமை மக்கள் சிந்தையிலும் வீற்றிருக்கும் வீரபுருஷன் ஜவஹர்லால்நேரு கூறினார்

சரியாக நள்ளிரவு மணி 12 அடித்ததும், புதுடெல்கியில் அரசியல்நிர்மாணசபைக் கூட்டம் ஆரம்பமாயது. சாந்தரூபி பாபு ராஜேந்திரபிரசாத் தலைமை வகித்து, இந்தப் புனிதமான தினத்தைக் காண்பதற்காக உயிர்த்தியாகம் செய்த வீரபுருஷர்களையும், வீர வனிதையர்களையும் ஞாபகப்படுத்தி, சுதந்திர இந்தியா தனது உன்னதலட்சியத்துக்காகப் பாடுபடும் என்றும், இந்தியாவிலே சிறுபான்மையினர், பெரும்பான்மையினர், என்ற பேதம் பாராட்டாது நீதி என்பது எல்லார்க்கும்கிரமமாக வழங்கப்படுமென்றும் தெரிவித்தார்

பண்டிதர்நேரு தம் பிரசாரணத்திலே மேலே காட்டியவாறு குறிப்பிட்டு இந்தியாவுக்கும், பாரதமக்களுக்கும், உலகமக்களுக்கும் சேவை செய்வதே எல்லாப் பாரதமக்களதும் லட்சியமாக இருக்கவேண்டுமென்று குறிப்பிட்டார்.

மகாத்மாகாந்தி இந்த விழாவுக்குச் சமூகம் அளிக்கவில்லை. ஆனல் கல்கத்தாவிலே, வகுப்புக் கலவரங்கள் நிகழ்ந்த இடத்திலே, இனியாவது வகுப்புச் சமாதானம் நிலவவேண்டுமென்று, 24 மணிநேரம் உபவாசம் இருந்தார், அவருடன் வங்கப் பிரதமர் ஜனப் ஷுராவர்த்தியும் தங்கி உபவாசம் அநுட்டித்தார்.

மகாத்மா புதுடெல்கியில் இல்லாத போதிலும், அவருடைய ஞாபகம் அங்கே எவரைவிட்டாவது அகலவில்லை. தலைவர்கள் எல்லாரும் முதலில் தம் வணக்கத்தை மகாத்மாவுக்கே சமர்ப்பித்தனர். ஜனங்கள் "மகாத்மாகாந்திக்கு ஜே" என்றபடியே கோஷம் செய்தனர்:

இந்திய சுதந்திர அங்குரார்ப்பணதினத்தில், பண்டிதர்நேரு, வெளிநாட்டில் வாழும் இந்தியமக்களுக்கோர் செய்தி விடுத்திருக்கிறார்.

"வெளிநாடுகளில் உள்ள ஒவ்வொரு இந்தியனும் இந்தியாவின் பிரதிநிதியாகும். இந்தியாவின் மானத்தைக் காக்கும் பொறுப்பு அவர்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதை அவர்கள் மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். சுதந்திரத்துக்கோ, அல்லது எங்கள் தேசத்தின் கௌரவத்திற்கோ விரோதமான எதற்கும் நீங்கள் பணிந்துவிடக்கூடாது. உங்கள் சுதந்திரத்துக்குப் பங்கம் வராமல் எப்படியும் பாதுகாத்துக்கொள்ளல்வேண்டும், அதுபோல மற்றவர்களின் சுதந்திரத்தையும் நீங்கள் கௌரவித்து மதிக்க வேண்டும்." என்பதேபண்டிதர்நேரு விடுத்துள்ள செய்தியாகும்.

இந்திய சமஷ்டியில் பின்வருவோர் மந்திரிகளாக நியமனம்செய்யப்பட்டு சென்ற வெள்ளிக்கிழமை விசுவாசப் பிரமாணமெடுத்துப் பதவி ஏற்றுக் கொண்டனர்:

பண்டித ஜவஹர்லால்நேரு: பிரதம மந்திரி, அயல்நாட்டு மந்திரி, விஞ்ஞான ஆராய்ச்சி மந்திரி.

சர்தார் வல்லபாய்படேல்: சமஸ்தானங்கள், தகவல், ஒலிபரப்பு உள்நாட்டுப் பகுதிகள் மந்திரி.

டக்டர் ராஜேந்திரபிரசாத்: உணவு விவசாய பகுதிகள்.

சர்தார் பலதேவ்ஸிங்: பாதுகாப்புப்பகுதி.

ஸ்ரீ சண்முகம் செட்டி: பொக்கிஷப்பகுதி.

டக்டர் பி. அம்பேத்கார்; சட்டப் பகுதி.

டக்டர் ஜான்மத்தாய், புகைரதப் போக்குவரத்து,

டக்டர் சியாமப் பிரசாத் மூகர்ஜி: கைத்தொழில், சப்ளை.

ஸ்ரீ ஸீ. எச். பாபா: வர்த்தகபகுதி

ஸ்ரீ என், வி. காட்கில்: பொதுமராமத்து, சுரங்கம், மின்சார பகுதிகள்.

ஜனப் ராபி அகமது கித்வாய்: போக்குவரத்து

ராஜகுமாரி அமிர்தகௌரி: சுகாதாரப்பகுதி

மௌலான அபுல்கலாம் ஆஸாத்: கல்விமந்திரி

ஸ்ரீ ஜகஜீவன்ராம்: தொழில்மந்திரி

## கும்பாபிஷேகம்

வண்ணார்பண்ணை கிழக்கு சாந்தைடர் மடம் கற்பக விநாயகப் பெருமானுக்கு வருகிற புதன்கிழமை (4 8-47 பகல் 10 மணிக்குமேல் வரும் சுபமுகூர்த்தத்தில் மகாகும்பாபிஷேகம் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படலாயிற்று; சிலகாலமாகக் கிலமுற்றுக் கிடந்த இத் திருக்கோயிலை, ஊரிலுள்ள சைவாபிமானிகள் பலர் சேர்ந்து மேற்படி ஆலயத் தர்மபரிபாலனச் சபையொன்றைக்கூட்டிப் பெரும்பொருள் சேர்த்து ஆலயத் திருப்பணியை விதிப்படி பூரணமாக நிறைவேற்றி அழகிய பெரிய உற்சவ மூர்த்தியுந் நவமாக அமைப்பித்துள்ளனர்; இத் திருக்கோயிலிலே நல்ல கதாப்பிரசங்கங்களும் சிரமமாக நடைபெறுகின்றன; திருப்பணி வரவு செலவுக் கணக்குப் பத்திரமும் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி தர்மபரிபாலன சபையார் செய்துவருந் திருத்தொண்டு பாராட்டற்பாலது

## பாரதம் இனிது வாழி!

1 சிறையினிற் றவங்கள் தாங்கிச் சீரிய வாழ்வுந் தாங்கிப்
பொறைமிகு முனது மைந்தர் புரிந்தநற் றியாகந் தன்னுல்
கறைதருந் தளைக வின்று கடிதினி லுடையக் கண்டோம்
மறைபுகழ் அன்னய், நீடு மாண்புற வாழி/ வாழி!!

2 பட்டங்கள் துறந்து நின்றார் பார்புகழ் அகிம்சை தன்னுல்
வெட்டியுன் தளையை வீழ்த்தி விடுதலை வகுத்தும் வைத்தார்
இட்டநற் றெய்வ மென்றுன் இணையடி யேத்தி நின்றார்
பட்டுள துன்பம் மாறப் பாரதம் வாழி! வாழி!!

3 சுதந்திர கடாட்சம் பொங்கத் துன்பங்க ளகன்று மாயப்
பதந்தமைப் பற்றி நிற்கும் பாரிய விலங்கும் வீழ
இதந்தரும் அன்னை யுன்றன் இன்னடி யமர்ந்து மக்கள்
கரந்தனைக் கூப்பி யேத்தக் களிப்புட னூழி வாழி!

4 வேதங்கள் துலங்க நல்ல வித்தைகள் துலங்க வையம்
போதங்கள் துலங்க வுன்றன் பொன்முடி துலங்க நாட்டில்
நாதங்கள் துலங்க மைந்தர் நல்லிசை துலங்க நாளும்
ஏதமில் வாழ்வு பெற்றே பாரதம் இனிது வாழி!

—"யாழ்ப்பாணன்"

## ஆரியமணி அரவிந்தர்

1-ம் பக்கத் தொடர்ச்சி

நாட்டின் கலைப்பெருமையை உலகு அறியச்செய்தார். இவ்விதம் கலைத்தவமும் கலைத்தொண்டும் செய்துகொண்டே அரசியல்வானையும் கவனித்தார். இடைக்கிடை மறைமுகமாக கட்டுரைகளும் "இந்துப்பிரகாஸ்" முதலிய பத்திரிகைகட்கு, எழுதிவந்தார். நாடு இன்னும் பக்குவமில்லை யென்பதை அறிந்ததும் நிறுத்திக்கொண்டார்.

1905ம் ஆண்டில் வங்காளப் பிரிவினை காரணமாக எழுந்த வீராவேசம் நாடுமுழுவதையும் தட்டி எழுப்பியது. வங்கநாட்டில் கிளர்ச்சி வலுத்தது. அரசியல் அடக்குமுறையுந் தாண்டவமாடியது. காங்கிரஸில் தலைமைவகித்த மிதவாதிகளின் மனப்பான்மை அரவிந்தருக்கு அருவருப்பைக் கொடுத்தது: உத்தியோகத்தை உதறித்தள்ளி, பாலகங்காதர திலகருக்குப் பக்கத்துணையாயிருந்து சூரத் காங்கிரசில் கலந்துகொண்டார். இத் தீவிரவாதிகளின் பணியில் பங்கெடுத்த இரு தமிழர்களை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது. அவர்கள் சிதம்பரப்பிள்ளையும் சுப்பிரமணிய பாரதியாருமேயாம். தீவிரவாதிகட்கு இடர் விளைத்த அரசியல் தலைவர்களின் மனப்பான்மையை கீழ்க் கண்ட வரிகளில் கவிக்குயில் பாரதியார் அழகாகவும் வேடிக்கையாகவும் படம்பிடித்துக் காட்டியுள்ளார்:-

"திலகன் ஒருவனலே இப்படிப்
பேரச்சு
பயல்கள் நெஞ்சில் பயமென்பதே
போச்சு
பட்டம் பெற்றோர்க்கு மதிப்
பென்பதும் இல்லை
பரதேசப் பேச்சில் மயங்குபவ
ரில்லை
சிமைத்துணி யென்றால் உள்ளங்
கொதிக்கிறார்."

இக்கிளர்ச்சிக்குப் பிறகு அரவிந்தர் வெளிப்படையாக பிரசங்கமேடையிலும் பத்திரிகைகளிலும் தீவிரப்பிரசாரஞ் செய்தார். அவரது ஆவேசப் பேச்சில் எப்போதும் "ஆண்டவனே தேசத்தை நடத்துகிறான். இது ஆண்டவன் இயக்கம், அவன் தனது காரியத்தை நிறைவேற்றியே தீருவான்' என்ற அருள்வாக்கு பொலிந்து நிற்கும். அரசினர் அடுத்தடுத்து மூன்று வழக்கில் அவரைத் தண்டிக்கத்தெண்டித்தனர். மூன்றிலும் தோல்வியடைந்தனர் இரண்டாவதான அலிப்பூர் படுகொலை வழக்கு உலகப்பிரசித்தியானது. அதில் அவர் ஓர் ஆண்டு காவல் சிறையில் வைக்கப்பட்டும் இருந்தார். அந்த ஓர் ஆண்டு அவருக்கு அருந்தவக்காலமாக மாறியது. அந்த வழக்கு முடிவில் அவருக்காக அரும்பாடுபட்ட சித்தாஞ்சனதாசர் (பின்னர் தேசபந்து) கூறிய வசனங்கள் அரிய தீர்க்கதரிசனம் பொருந்தியவை. அரவிந்தரின் வாழ்க்கையின் இரண்டாவதுபாகத்தை ஆரம்பிக்குமுன், அந்த தீர்க்கதரிசனவாக்கை வாசகர்கட்கு அறிமுகப்படுத்த விரும்புகிறோம்.

எட்டுநாளாகத் தொடர்ந்து எதிரிபக்கத்தின் வாதத்தை திறமையுடன் நடாத்திய சித்தாஞ்சனதாசர் இறுதியாகக் கூறியது:—

"இவர் இக்கச்சேரிமுன் நிற்கவில்லை: உலகசரித்திரத்தின் உயர்நீதிமன்றத்தின் முன் நிற்கிறார். இந்த விவகாரம் முடிந்து, நெடுநாட்களுக்குப்பின், இந்த அமளியும், கிளர்ச்சியும் அடங்கி நீண்டநாட்களுக்குப் பின், இவர் காலஞ்சென்று நெடுநாட்களுக்குப் பின்னும், இவரை உலகம் தேசாவேசக்கவி, பாரதசமுதாயநபி, மனிதசாதியின் காதலன் என்று போற்றும்; அவர் காலஞ்சென்ற வெகுநாட்களுக்குப் பிறகு, அவருடைய திருவாக்குகள் இந்தியாவில் மட்டுமல்ல, கடல் கடந்து, வெகுதொலையிலுள்ள நாடுகளில் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கும்."

5-5-1900 அரவிந்தர் நிரபராதியாய் வெளிவந்தார். உள்ளந் தனிமையை நாடியது. காவல் சிறைக்காலத்துத் தவம் பலித்துவிட்டதெனலாம். 4-4-1910 புதுவை சேர்ந்தார். அருட்பிரகாச வள்ளலார் குறித்த உத்தரயோகி வந்துவிட்டதாகத் தமிழன்னை உளம் பூரித்தாள். வங்காளத்தில் நிலைமை மாறியதும் மறுபடியும் அரசியல்துறை நண்ணவே எண்ணங்கொண்டிருந்தார். ஆனல் அவரைத் தடுத்தாட்கொண்டுவழிகாட்டிய அன்னையின் திருச்சித்தம் வேறாய்விட்டது பல பிரமுகர்களின் அழைப்பு வந்தும், அவர் தமது யோகாச்சிரமத்தை விட்டு வெளிக் கிளம்பவேயில்லை அவரது ஆயுளின் சரி அரைவாசிப் பாகம் புதுவையில் தனி மோனயோகத்திலேயே கழிந்துவிட்டது. அவரது யோகம் தனி முத்தியையோ சித்தியையோ, அல்லது அவரது

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

**செவ்வாய் ஆகஸ்ட் 19**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 உறையூர் டி. வி. சிவலிங்கம்பிள்ளை பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 குரல் வகை இசைத்தட்டு 8 30 டி. கே. பாலகணேசய்யர் புல்லாங்குழல் 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி. கே. பாலகணேசய்யர் புல்லாங்குளல் 2-00 தமிழில் செய்திகள் 2-05 டி. கே. பாலகணேசய்யர் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்புமுடிவு.

மாலை 5-00 லக்ஷ்மி நடராசன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7-00 லக்ஷ்மி நடராசன் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 மஹாராஜபுரம் விஸ்வநாதய்யர் பாட்டு கண்டதேவி எஸ். அழகிரிசாமி வயலின் எம் எஸ். சக்திவேலு மிருதங்கம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 வாய்த்த இசை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள், வானிலை (ஆங்கிலம்) 9 45 மூன்று வயலின்கள் 10-00 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10 30 ஒலிபரப்பு முடிவு.

**புதன் ஆகஸ்ட் 20**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7 30 கொட்டையூர் ஆர் தங்கவேலு பாட்டு 8 00 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 நாகஸ்வர இசை இசைத்தட்டு 8-30 கே. கௌரி அம்மாள் பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு.

1-00 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே. கௌரியம்மாள் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2.05 கே. கௌரி அம்மாள் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்புமுடிவு.

மாலை 5-00 லால்குடி ஆர். நீலமேகம் பிள்ளை வயலின் 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7-00 அணைந்த விளக்கு நாடகம் 7 15 சித்ரகானம் இசைத்தட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 ரேடியோ வாத்ய கோஷ்டி 8 கொட்டையூர் ஆர், தங்கவேலு பாட்டு 8-30 லால்குடி ஆர் நீலமேகம்பிள்ளை வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலத்தில் பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை ஆங்கிலம் 9-45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10-30 ஒலிபரப்பு முடிவு.

**வியாழன் ஆகஸ்டு 21**

காலை 7 15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஜி. கிருஷ்ணமூர்த்தி வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 குரல்வகை இசைத்தட்டு 8-30 வி. பி. லக்ஷ்மிநாராயண மேனன் பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1-00 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள். 1-40 பெண்ணுலகம் 2.00 தமிழில் செய்திகள் 2-05 பி. ஏ. பெரியநாயகி இசைத்தட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்புமுடிவு

மாலை 5 வி. பி. லக்ஷ்மிநாராயண மேனன் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7 15 செய்தி விளக்கம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 கே. வி. கேசவ பாகவதர் பாட்டு 9-00 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ரேடியோ நாடக இசை ஒலிப்பதிவு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள்: வானிலை (ஆங்கிலம்) 9-45 ஜி. கிருஷ்ணமூர்த்தி வீணை 10 ½ ஒலிபரப்பு முடிவு.

**வெள்ளி ஆகஸ்ட் 22**

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 பி. வி. சீதாராமன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்ய கோஷ்டி 8-30 ஆர். எஸ். மணி பாட்டு 9-00 ஒலிபரப்பு முடிவு

1-00 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி. சி. சீதாராமன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 பி சி. சீதாராமன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5-00 சாட்டியக்குட்டி ஆர். மீனாக்ஷிசுந்தரம் பாட்டு 5-40 குரான்-ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சாட்டியக்குட்டி ஆர். மீனாக்ஷிசுந்தரம் பாட்டு 7-30 தமிழில் 7-30 தமிழில் செய்திகள் 7-45 கிராம நிர்மாணத் திட்டம்: போக்கு வரத்து சாதனங்கள் 8.00 திருவிழிமிழலை எஸ் சுப்பிரமணிய பிள்ளை சகோதரர்கள் நாகஸ்வரம் டி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை தவில் 9- ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 தென்னிந்திய நாட்டுப் பாடல்கள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள்: வானிலை (ஆங்கிலம்) 9-45 வசுந்தரா இசைத்தட்டு 10.00 நீங்கள் கேட்டவை 10-30 ஒலிபரப்பு முடிவு.

## ஆரியமணி அரவிந்தர்

3-ம் பக்கத் தொடர்ச்சி

அடியார்களின் மோட்சத்தையோ குறித்ததல்ல. மனிதசமூகத்தை மன வுணர்வுக் கப்பாலுள்ள விஞ்ஞானவுணர்வுக்கு உயர்த்துவதே இந்த யோகத்தின் நோக்கம். பக்தி யோகம். ஞானயோகம் எல்லாம் இதில் அடங்கியிருப்பதால் அரவிந்தர் யார்க்கம பூரண யோகம் என அழைக்கப்படுகின்றது. சாதிமத, சடங்கு ஆசார, சாத்திர கோத்திர நிபந்தனைகள் ஒன்றுமே இதற்குக் கிடையாது. அரவிந்தரின் சொந்த விளக்கத்தின்படி, "வாழ்வின் சிகரலை அவிழ்ப்பதே யோகம். சுத்தி, முத்தி, சித்தி, பக்தி இவை யோகாங்கங்கள். மனம், உள்ளம், உயிர், உடல் இவை தெய்வகாரியங்களைச் செய்யவேண்டும்' ஆத்ம மலர்ச்சி. அதின் ஜோதி — சக்தி — ஆனந்த விகாசம், அதனால் மனித சாதியின் ஐக்கியம் இவை உலகவாழ்விற்கு அவசியமாகும். வாழ்க்கை தெய்வத் தேன்மலராக வேண்டும், தனி மனிதன் உலகமனிதனாகவேண்டும். ஆத்ம சித்தியால் சுயராஜ்யமும் அகண்ட சித்தியால் சாம்ராஜ்யமும் பெறவேண்டும்."

வையத்தி லேசெய்வ
 வாழ்க்கை பெறுவதே
உய்யும் வகையென
 உண்மையைச் சொல்லி
சின்மயத் தீயினிற்
 செம்மை யுருக்கியே
பொன்மய மாக்கும்
 புதயுகச் சித்தனும்
பூரணயோகி அரவிந்தர்
 வாழ்க! வாழ்க!!

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோடு

1. காரைநகர் மேற்கு இபபோமலாயன் யூனியன் நிகிரிசிம்பிளான் காத்திகேசு இராமப்பிள்ளையும்.
2. ஷைபெண் தங்கமுத்து இவர்களின் அப்றேணி காரைநகர் ஆறுமுகம் கனகசபை வழக்காளிகள்.

இல 3273.

1. காரைநகர் மேற்கு தம்பையா பொன்னுத்துரை இவர் காலஞ்சென்ற தனது தகப்பனுர் வேலுப்பிள்ளை தம்பையாவின் ஆதனத்துக்கு 1031-ம் இலக்க வழக்கில் தத்துவ காரனும்பெண்
2. ஷை பாறுபதிப்பிள்ளை
3. ஷை அருணசலம் சிவபாதமும் பெண்
4. ஷை சரஸ்வதியும் எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டு 3273-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணியை 1947-ம் ஆண்டு புரட்டாதி மாதம் 13-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணியின்விபரம்

காரைதீவுக் கோயிற்பற்று களபூமி இறை உப்புவயல் நெற்பரப்பு 40 இதல் கிழக்குப்பக்கமாக நெற்பரப்பு 20 எல்லை கிழக்கு கந்தையாபெண் காசுபதியும் கதிரவேலு பெண் தெய்வானையும் வடக்கு பரமசாமிபெண் சிவகாமியும் கந்தையா பெண் பாறுபதியும் மேற்கு இதன் மிகுதியாதனம் தெற்கு இராமனுதர் மாணிக்கத்தினுதனம் இதடங்கலும்.

காரைதீவு 7-8-47. ஆ. ச. கந்தையா கொம்மிஷனர்.

M 144—19-8-47

## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48

## கந்தசாமி வைத்தியர்

## அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி சரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீராழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

**கால் றுத்தல் விலை ரூபா 5-00**

வி. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம் :

ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்

— வல்வெட்டித்துறை —

Std 45 1-7-47—30-6-48 (செ)

## விளம்பரம்

திரிகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்திற்கு ஓர் தராதலப்பத்திர முடைய பெண் ஆசிரியை செப்டெம்பர் மாதம் 9-ந் தேதி தொடக்கம் தேவை. பாடசாலையில் தங்குவதற்கு வசதிகள் உண்டு. விரும்புவோர் உடனே மனேச்சருக்கு விண்ணபபிக்கவும்.

Mis 109 8, 12, 19-8-47.

## தேவை

சிவன் ஐக்கிய பண்டகசாலைக்குத் தகுதி வாய்ந்த ஓர் மனேச்சர் தேவை. சங்கப் பிரமாணங்களுக்கமைய நடக்கவேண்டும்.

தொடக்கத்தில் மாதச் சம்பளம் ரூபா 55 கொடுக்கப்படும். பிணைப்பணம். ரூபா 450 கட்டவேண்டும். விரும்புவோர் காரியதரிசி அவர்களுக்கு 30-8-47 க்கு முன் விண்ணப்பஞ் செய்யவும்.

சிவன்கோவிலடி இங்ஙனம்
வட்டுக்கோட்டை ந நடேசர்
29-7-47 காரியதரிசி.

M 101 1-8.47 — 29-8-47

உங்கள் வியாபாரம்

விருத்தியுற

வேண்டுமா?

*

அப்படியானல்

இந்துசாதனத்தில்

விளம்பரஞ் செய்யுங்கள்

## வதுளையில் கவிஞர்க்கு வரவேற்பு

வதுளை மொடேண் தியேட்டர் மண்டபதில் 31-7 47 வியாழக்கிழமை மாலை 6 30 மணிக்கு கவிஞர் இராமலிங்கம் பிள்ளைக்கு பகிரங்க வரவேற்பு ஸ்ரீமான் N. மாணிக்க இடைக்காடர் M. A, B. Sc. C. C. S. A G. A. அவர்களின் தலைமையில் கீழ் நடைபெற்றது. சாதி சமய வேறுபாடின்றி, கவிஞரை வரவேற்பதில் பெருந்திரளான ஜனங்கள் கூடியிருந்தனர். சந்தோஷ ஆரவாரத்துடன் கவிஞர் மண்டபத்துள் அழைத்துச் செல்லப்பட்டு மாலை சூட்டப்பட்டார்.

தலைவர் கவிஞரை வரவேற்றுப் பேசுகையில் கவிஞரின் வரவு இலங்கை மக்களிடையே பெரியதோர் மகிழ்ச்சியையும், புதியதோர் மலர்ச்சியையும் உண்டாக்கியிருக்கிறதென்றும், கவிஞர் கவிமணி பாரதியைப்போல் தாய்நாட்டுக்கும் தமிழன்னைக்கும தொண்டு செய்வது போற்றத்தக்கதென்றும், சுதந்திர மாதாவுக்குத் தொண்டுசெய்யும் வாலிபர் உள்ளங்களைத் தட்டியெழுப்ப, அந்திய பாஷையில் மயங்கிய மனிதர்களின் மாய உணர்ச்சியை ஒளிபெறச் செய்ய கவிஞரின் தேசியக் கீதங்கள் வேண்டுமென்றும், நாட்டுக்கும் பாஷைக்கும் தொண்டுசெய்வான்வேண்டி அவருக்கு நீண்ட ஆயுளை இறைவனருள வேண்டுமென்றும் கூறினர்.

அதன்பின் கவிஞர் இயற்றிய பாட்டுக்கள் சிலவற்றை ஸ்ரீமதி மகேஸ்வரி - பரமநாதர், செல்வி சரஸ்வதி - கணபதிப்பிள்ளை இருவரும் பாடி சபையோரையும், கவிஞரையும் மகிழ்வித்தனர். பாடுங்கால் கவிஞரின் புன்னகை ததும்பிய முகமே அவரது மட்டிலா மகிழ்ச்சியைக் காட்டிற்று. பின் உபசாரப்பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டதும் ரூபா 1001/– (ஆயிரத்து ஒன்று) கொண்ட பண முடிப்பு அளிக்கப்பட்டது.

இவற்றிக்குபின், கவிஞர் தமக்கு அளிக்கப்பட்ட குதூகல வரவேற்புக்கு நன்றி தெரிவிக்குமுகத்தான் சில கூறினர். தமக்கு இந்தியாவில் பல இடங்களிலும் வரவேற்பு நிகழ்ந்ததென்றும், அதுபோலவே இலங்கையின் பல பாகங்களிலும் இப்பொழுது வரவேற்புகள் நிகழ்ந்து கொண்டு இருக்கின்றனவென்றும், இவற்றுள் முக்கியமாகக் குறிப்பிடக்கூடியனவாகிய வரவேற்புகள், சேர் வி. வீ. ராமன் மனைவியார்தலைமையில்நிகழ்ந்ததும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில்டண்டிதமணி கதிரேசன் செட்டியார் தலைமையில் நிகழ்ந்ததும் எனவும், அவற்றுக் கொப்பானதும் மகத்துவமானதுமாகிய பெரிய வரவேற்பு இன்று இந்த மண்டபத்தில் நிகழ்ந்ததுதான் என்றும், இன்று அளிக்கப்பட்ட வரவேற்பு முன்னைய இரண்டையும் நினைவுக்குக் கொண்டுவந்துள்ளதென்றும் மகிழ்வுடன் கூறினர். மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், அளிக்கப்பட்ட உபசாரப் பத்திரத்தில் கூறப்பட்டிருப்பனவற்றைக் கேட்டுத் தாம் மகிழ்ச்சியுறுவதாகவும், காந்தியக்கவியென்பதில் தாம் பெருமையடைவதாகவும் கூறியதுடன் புத்தி நுட்பத்தோடு அகிம்சை சத்யம் இவையும் சேர்ந்திருந்தாற்றான் மனிதன் கடைத்தேற முடியும் என்றுங் கூறினர் இடையிடையே ஹாஸ்யச்சுவை நிரம்பிய கதைகளால் சபையோர் அனைவரையும் வசீகரித்தார்

காரியதரிசி திரு வே. தில்லையம்பலம் நன்றிகூறியபின் "கவிமணி நீடூழிவாழ்க" என்றகோஷத்துடன் கூட்டம் எட்டரை மணியளவில் நிறைவேறியது.

## தமிழ்
## ஆசிரிய தராதரப்பத்திரப் பரீட்சை

ஆசிரியர் போதனுகலாசாலை
ஆசிரியர்களால் வகுக்கப்பட்ட
பாடத்திட்டம்

முதலாம் அல்லது இரண்டாம் பகுதி
முதலாம் பாடம் ரூபா 7 50
அடுத்தஒவ்வொருபாடத்துக்கும் 5 00

**அற்லஸ் ஹால்**
தபாற் பெட்டி இல. 649
கொழும்பு

Std 19 15-7 — 26-8-47 (செ)

வியாபாரத்திற்கழகு
விளம்பரஞ் செய்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணக் கவி நுட்பம்

## திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

வாட்டமோ டமரர் கொண்ட மயக்கறத் தனது செய்கை
காட்டிய வந்தோன் மேருக் கனவரை யசைத்துக் கஞ்சத்
தோட்டிதழ் கொய்து சிந்துந் துணையென வுயர்ந்த செம்பொற்
கோட்டினைப் பறித்து வீசிக் குலவினன் குழவி போல்வான்

தேவர்களா யுள்ளார் கொண்ட சந்தேகமும் அதனு லெழுந்த மன வாட்டமும் ஒழிய, தமது செயலாகிய திருவிளையாடலைக் காட்டும் வண்ணம் அங்கே தோன்றிய குமரவேள், மேருவாகிய திண்ணியமலையை அசையச்செய்து தாமரைப்பூவின் பொகுட்டோடு கூடிய இதழ்களைப் பிடுங்கும் அத்துணை இலகுவான முறையில், அம் மேருமலையின் உச்சியிலுள்ள உந்நதமான செவ்விய பொன்போன்ற சிகரத்தை, தாம் கொண்டருளிய பாலசுப்பிரமணியத் திருக்கோலத்துடன் பிடுங்கிவீசிவிட்டு உலாவினர் என்பது கருத்து.

மயக்கத்தினுல் வந்த வாட்டமாதலின் வாட்டம் பின்வைத்துப் பொருள்கூறப்பட்டது. காட்டிய செய்யிய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம்; வந்தோன் - வினையாலணையும் பெயர்; வந்தோன் குலவினன் எனக்கொண்டு முடிக்குக; கனகவரை கனவரையெனத் தொக்கு நின்றதெனக் கொள்ளின், பொன்வரையாகிய மேருவெனப் பொருள்கொள்க; தாமரைப்பூவிதழைக் கொய்தல் எத்துணை இலகுவோ, அத்துணை இலகுவில் மேருமலையின் சிகரத்தைக் கொய்தாராதலாலும், அங்ஙனங் கொய்யும்போதும் தாம்கொண்டருளிய குழந்தைத் திருவடிவத்தோடு காய்தாராதலாலும் "கஞ்சத்தோட்டிதழ் கொய்து சிந்துந் துணையென ………… கோட்டினைப் பறித்துவீசிக் குலவினன் குழவியேபோல்" என்றுரென்க. உயர்ந்த செம்பொற் கோட்டினைப் பறித்து வீசியவிடத்து யாதுஞ் சிரமப்பட்டிலரென்பார் "குலவினன்" என்றுர்.

[வாட்டமொடமரர் கொண்ட மயக்கு - இச்செய்கையை யெல்லாம் எவர் செய்தாரென வாடித்தேவர் கொண்ட மயக்கம்; காட்டிய - காட்டும்படி; இச்செயல்களையெல்லாம் எவர் செய்தாரென்று மயங்கிய தேவர்களுக்கு; தாமே இச்செயலனைத்தையுஞ் செய்தேமென்றறிவித்தற் பொருட்டு மேருமலையை யசைத்துத் தாமரைமல ரிதழைப் பறித்தெறியும் அத்துணை இலேசாக, அம் மேருச் சிகரத்தைப் பிடுங்கி யெறிந்து ஒரு குழந்தைபோல உலவினரென்க]. (40)

தோன்றிய குமரன் றன்னைச் சுரபதி சுரரா யுள்ளோர்
ஆன்றதோர் திசைகாப் பாள ரனைவருந் தேரிதுற் றன்னே!
வான்றரை திரிபு செய்தோன் மற்றிவ னுகு மேன்னுக்
கான்றிரி யரிணைய நேரும் விலங்கெனக் கலங்கிச் சோல்வார்

இந்திரனும் தேவர்களும் திக்குப்பாலகர்களும் ஆகிய எல்லோரும் தங்கள் கண்களுக்குப் புலப்பட்ட பால சுப்பிரமணியக் கடவுளை அவதானித்துப் பார்த்து, ஐயோ! மேலுலகத்தையும் இப்பூவுலகத்தையும் தடுமாறச் செய்தவன் இந்தப் பாலனுவன் என்று சொல்லி, காட்டிலே சஞ்சரிக்கும் சிங்கத்தை யெதிர்கண்ட வனைய விலங்குகள்போன்று கலங்கிச் சொல்வாராயினரென்பது கருத்து.

இந்திரனும் சிலதேவர்களும் திசை காப்பாளரும் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் விளையும் அநர்த்தங்களைப் பிரமதேவரிடம் முறையிடும்படி செல்லப் புறப்பட்டபோதே, கடவுள் அவர்களுடைய கண்களுக்குப் புலப்பட்டனராதலின் அவர்களைமாத்திரம் இங்கே யெடுத்துக் கூறினுரென்க அன்னே, அந்தோ என்பதுபோல் அச்சத்தையும் ஆச்சரியத்தையும் கழிவிரக்கத்தையுங் காட்டவந்த இடைச்சொல்; முருகவேளை அரிக்கும், இந்திரன் முதலாந் தேவரை வனைய விலங்குக்கும் ஒப்பிட்டார்; இச் சிறுவனு எம்மால் நினைக்கவும்முடியா இம் மாறுதல்களையெல்லாஞ் செய்தான் என்ற வியப்பினுல் அன்னு! என்றுர்; மற்று - அசை. (41)

நோய்தாங் குழவியெனக் கோள்கிலம் நோன்மை நாடின்
வெய்தா மவுணக் குழுவோரினும் வெய்யன் யாரும்
எய்தாத மாய முளனுத லிவனறன்னை வெம்போர்
செய்தாடல் கோள்வம் இவணென்று தேரிந்து சூழ்ந்தார்

வலிமையற்ற குழந்தையென்று இவனை மதிக்கமாட்டோம்; இவனுடைய செயற்கருஞ் செயல் முதலிய வலிமைப்பாட்டை ஆராயுமிடத்து, கொடியவர்களாகிய (சூரபன்மன் முதலாம்) அசுர கூட்டத்தைக் காட்டிலும் இவன் மகா கொடியவன்; வேறு எவரும் அறியாத மாயங்களையறிந்தவன்; ஆனதினுல் இப்பொழுது இவனோடு மாறுபட்டுக் கொடிய போரைச்செய்து இவனை வெல்லவேண்டுமென்று நிச்சயித்து (முருகக் கடவுளைச்) சூழ்ந்தார்கள் அந்தத் தேவர்கள் என்பது கருத்து.

தோற்றத்தளவிற் குழவியெனினும் செயலாற் சூரபன்மன் முதலாம் அசுரரைக் காட்டிலும் வெய்யனுதலின "குழவியெனக் கொள்கிலம்" என்றுர்; சூரபன்மன் முதலியோர் செய்த வெற்றிப்பாட்டோடு கூடிய செயல்களைக்காட்டிலும் இக்குழவியின் செயல்கள் அபூர்வமாதலால் "வெய்தாம் அவுணர் குழுவோரினும் வெய்யன்" என்றனர்; சூரபன்மன் முதலானேரைக்காட்டிலும் பராக்கிரம முடையராக, அச் சூரபன்மனுக்கஞ்சிக் காந்துறையும் இந்திரன் முதலாம் அமரர்கள் முருகவேளுடன் யுத்தம் செய்ய நினைத்துச் சூழ்ந்தது என்னையோவெனின் அப்பெருமானை யறியாமையினுலும் தனிக் குழவியென நினைத்தமையினுலுமென்க: இவண் என்றது காலமுமிடம் இரண்டினையுங் குறித்து நின்றது. (42)

## பாகிஸ்தான் மந்திர சபை

பாகிஸ்தான் இராஜ்யத்தின் மந்திரிகளாகப் பின்வருவோர் நியமிக்கப்பட்டிருக்கிறுர்கள்.

மிஸ்ரர் லியாகத் அலிகான்:— பிரதமர்; ராணுவம், வெளிநாட்டு விவகாரம்.

மிஸ்ரர் குலாம் மகமத்: நீதி

மிஸ்ரர் கஸ்னுபர் அலிகான்: உள்நாட்டு விவகாரம், உணவு, விவசாயம், சுகாதாரம்.

சர்தார் அப்துல்ராப்நிஷ்டர்: புகைரதங்கள், போக்குவரத்து, விளம்பரம்.

ஜனுப் ஐ. ஐ. சுந்திரிகர்: வர்த்தகம், கைத்தொழில்.

ஸ்ரீ ஜோகேந்திரநாத்மண்டல்: சட்டம், கல்வி, வேலைப்பகுதி, சுரங்கம்

ஜனுப் ஜின்னு இனி காயிதே அஸாம் ஜின்னு என்று வழங்கப்படுவார். பாகிஸ்தான் அரசியல் [illegible] தலைவராகவும் அவர் [illegible].

# யாழ்ப்பாணத்திற் சுதந்திர தினம்

இந்திய சுதந்திரதினம் யாழ்ப்பாணம் எங்கணும் மிகவும் விமரிசையாகச் சென்ற வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணம் பெரியகடைவீதிகள் மகர தோரணங்களாலும் இந்திய மூவர்ணத் தேசீயக் கொடிகளாலும் பாகிஸ்தான் கொடிகளாலும், அலங்கரிக்கப்பட் டிருந்தன. ஆலயங்களில் விசேஷ பூசைகள் செய்யப்பட்டன. "மகாத்மா காந்திக்கு ஜேய்", "பாரதமாதாவுக்கு ஜேய்" என்ற கோஷங்களுடன் ஊர்வலங்கள் சென்றன.

வெள்ளிக்கிழமை பின்னேரம் யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில், இலங்கை இந்தியக்காங்கிரஸ, யாழ்ப்பாணக் கிளை ஸ்தானபனத்தின் சார்பில் ஓர் மகாகூட்டம் நிகழ்ந்தது

### நல்லூரில்

பாரத நாட்டின் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்காக சென்ற வெள்ளிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் ஓர் கூட்டம் நல்லூர் ஸ்ரீ கணேச வித்தியா விருத்திச்சங்கமண்டபத்தில் மேற்படிசங்க உபதலைவர் ஸ்ரீமான் அ. ஐயாத்துரை அவர்கள் தலைமையில் கோளறுபதிகத்துடன் ஆரம்பமாயிற்று. அத்தருணம் சங்க மண்டபம் மகர தோரணங்களாலும், இந்திய மூவர்ணக் கொடிகளாலும் மகாத்மா, பண்டிதர் நேரு, சுபாஷ் சந்திரபோஸ், முதலிய தலைவர்களது படங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவ்வமயம் ஸ்ரீமான்கள் சி. சோமசுந்தரம், க. சந்திரசேகரம், க. இளையதம்பி, க. பொன்னையா முதலியோர் சுதந்திர வீரர்களைப்பற்றியும், அவர்கள் இந்தியாவுக்குச் செய்த தொண்டுகளைப் பற்றியும உணர்ச்சி ததும்பப் பேசி சுதந்திரதின் ஞாபகார்த்தமாக ஓர் அரசமரம், சங்க முன்றிலில் ஸ்ரீ வ. கிருஷ்ணன் அவர்களினுல் நாட்டப்பட்டது. பின்னர் சிற்றுண்டி வழங்கி பதும் தலைவர் அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் 9 மணியளவில் இனிதே நிறைவேறியது என மேற்படி சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றுர்.

### ஏழாலையில்

எமது தாய்நாடு இந்தியா விடுதலை அடைந்த தினத்தைக் குறித்து சென்ற வியாழக்கிழமை ஆவணி மாதம் 14-ந் திகதி மாலை 7 மணி தொடக்கம் ஏழாலை மேற்கில் சுதந்திரதினம் மிகவும் விமரிசையாகவும் சிறப்பாகவும் கொண்டாடப்பட்டது. மடலாயத்தில் எழுந்தருளியிருக்கும் கருணாகரப்பிள்ளையார் சந்நிதானத்திலிருந்து ஓர் ஊர்வலம் 8 மணியளவில் தொடங்கியது. சிறுர்கள், வாலிபர்கள், கமக்காரர்கள் ஆகியோர்கள் அதில் பங்குபற்றினர். உலகம் போற்றும் உத்தம காந்திமகானதும் பண்டித நேருவினதும் உருவப் படங்கள் அலங்கரிக்கப்பட்டு மாணவர்களால் கொண்டு செல்லப்பட்டன. தேசீய கீதங்கள் விசேஷ விற்பன்னர்களால் ஓதப்பட்டன. ஊர்வலம் முடிந்தபின் மடலாயத்தில் 11 மணியளவில் விசேஷ பூசை ஆரம்பமாயிறறு. மலர் மாலைகளாலும் தோரணங்களாலும் ஆலயம் அலங்கரிக்கப்பட்டது. பூசை முடிந்தபின் இந்திய சுதந்திர தினத்தைக் குறித்து இயற்றப்பட்ட பாக்கள் கோயில் பூசகரால் ஓதப்பட்டன. இந்திய சுதந்திர ஞாபகார்த்தமாக ஓர் அரசமரம் நாட்டப்பட்டது. திரு. மு. கந்தையா ஆசிரியர் அவர்களால் குறிப்புரை கூறப்பட்டது.

### பண்ணாகத்தில்

சென்ற 15-8-47 வெள்ளிக்கிழமை பிற்பகல் பிற்பகல் 4 மணியளவில் பண்ணாகம் வடக்கு இளைஞர் தேசீய இயக்கத்தினரால் அவ்வூர் மத்தியில் நிறுவியுள்ள தேசீய வாசகசாலையில் இந்தியசுதந்திர தினம் இனிது கொண்டாடப்பட்டது முதலாவதாகச் சுதந்தரக் கொடிகளும், இந்திய சுதந்தர வீரர்களாய மகாத்மாகாந்தி, சுபாஸ்சந்திர போஸ், பண்டிதர் ஜவஹர்லால்நேரு என்போரின் உருவப் படங்களும் பனிப்புலம் முத்துமாரியம்மன் திருவடிகளிற் சமர்ப்பித்துப் பூசை இயற்றப்பட்டது, இரண்டாவதாகச் சுதந்தரக் கொடிகளும், சுதந்தர வீரர்களின் படங்களும் பன்னூற்றுக்கணக்கானேர் தேசிய கீதங்கள் பாடவும், ஜெயகோஷங்கள் செய்யவும் ஊர்வலமாகத் தேசிய வாசகசாலைக்கு எடுத்துக் செல்லப்பட்டன. தேசிய வாசகசாலையில தேசிய கீதங்களுடனும், ஜெயகோஷங்களுடனும் இளைஞர் தேசிய இயக்கத்தலைவர் திரு ஆ. கந்தசாமிஆசிரியர் அவர்களால் சுதந்தரக் கொடியானது உயர்த்தப்பட்டது. பின்னர் வாசகசாலையில் பல பிரமுகர்கள், சுதந்தர வீரர்களையும். அவர்கள் இந்தியாவுக்குச் செய்த தொண்டுகளையும்பற்றி உணர்ச்சிமிகுந்த சொற்பொழிவாற்றினர். பின்னர் சிற்றுண்டி வழங்கல், நன்றியுரை தேவார பாராயணங்களுடன் விழா இனிது நிறைவேறியது.

—கடித.

## வெள்ளப்பெருக்கால் விளையும் அனர்த்தம்

சென்றவாரம் மலைநாடுகளிற் பெய்த மழை காரணமாக இலங்கையிலுள்ள மகாவலிகங்கையும் அதன் கிளையாறுகளும் காலுகங்கையும் பின் களனி கங்கையும் பெருகிவிட இவற்றுல் நேர்ந்துவரும் பொருட்சேதம் உயிர்ச்சேதம் முதலிய அநர்த்தங்கள் அதிகமாயின வெனலாம்; புகைரதப்பாதைகள், தெருக்கள், பாலங்கள் முதலியவற்றுட் பெருஞ் சிதைவுகளும் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டமையனுல் போக்குவரவு பெரும்பாலுந் தடைப்படலாயின; கொழும்பி லிருந்து வடமாகாணத்திற்கும், கீழ்மாகாணத்திற்கும் போய்மீண்ட புகைரதங்களும் இப்பொழுது செல்லமுடியா தொழிந்தன; நேற்றுவரையில் இங்கிருந்து அநுராசபுரம்வரை சென்ற காங்கேயன்றுறை — கொழும்புக் புகைரதத் தொடர் இன்று அநுராதபுரம் வரையிற்றனுஞ் செல்லாதென அறியலானேம்; புதினப் பத்திரிகைகளின் வரவும் கிரமமில்லாமற்போனமையினுல், இப் பெருவெள்ள விபத்தாலுண்டான நிகழ்ச்சிகளை உடனுக்குடன் அறிதலும் முடியாமலிருக்கிறது.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசளிப்பு விழா வருகிற 23-8-47 சனிக்கிழமை பிற்பகல் $6\frac{1}{2}$ மணி தொடக்கமாக இந்துக்கல்லூரி மண்டபத்தில் நிகழும். பரிசளிப்பு விழாக் கொண்டாட்டத்திற்கு உயர்தர நீதிமன்றத்து நீதியரசர் கௌரவ ஸ்ரீ வி. நாகலிங்கம் அவர்கள் தலைமைவகிப்பார் என்றும், இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாகவுள்ள ஸ்ரீஜுத வி. வி கிரி அவர்கள் ஓர் சொற்பொழிவு செய்வார் என்றும் அறிகிறேம்.

### சைவ பரிபாலன சபை 59 வது வருடாந்தக் கூட்டம்

நிகழும் சர்வசித்து ஹூ புரட்டாசி மீ 5 உ (21-9-47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் சபையங்கத்தவர்களாயுள்ளவர்கள் தங்கள் சந்தாப்பணத்தை நிலுவையின்றித் தனதிகாரியிடம் செலுத்தவேண்டும். சந்தாப் பணம் நிலுவையுள்ளவர்கள் கூட்டத்தில் வாக்குரிமைக்கு அருகரல்லர்.

மு. மயில்வாகனம்
11—8—47 காரியதரிசி
யாழ்ப்பாணம். சைவபரிபாலனசபை

Mis 115 19 8-47 —29-9-47

### நல்லூர்க் கந்தர் மகோற்சவம்

வருகிற வியாழக்கிழமை (21-8-47) புராதன புண்ணிய க்ஷேத்திரமாகிய நல்லூர்க்கந்தசுவாமி கோவிலில் கொடியேறி மகோற்சவம் இனிது நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரிய நூல்கள்

யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்
இயற்றியவை

| | | |
|---|---|---|
| 1. | இதுதான் உலகம் (நாவல்) | 8 - 0 |
| 2. | வானரசு (ஓரங்கநாடகம்) | 0 - 9 |
| 3. | அரவிந்தப் பிரகாசம் | 2 - 8 |
| 4. | ஆனந்தரங்கப்பிள்ளை | 0 - 8 |
| 5. | சிவானந்த ஜோதி | 1 - 0 |
| 6. | பகவத்கீதை | 1 - 4 |
| 7. | தேசிய கீதம் | 1 - 8 |

**AUMKARA LIBRARY**
Book - Sollers P. O. B. 23
**Puduk Kottai :: (S. INDIA)**

குறிப்பு—ஸ்ரீ அரவிந்த ஜயந்தியை முன்னிட்டு 31-8-47 க்குள் முன் பணம் அனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றி அனுப்பப்படும். புத்தக வியாபாரிகட்குக் கமிஷன் 25 % தரப்படும்

Misc 110 2, 19 8-47

## விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரியதெருவில், அநுமதிபெற்றுப் பல்வைத்தியம், கண் வைத்தியம் செய்துவரும் நான், பழையபடி இரு வைத்தியங்களையும் தொடங்கி நல்லமுறையில் நடத்திவருகிறே னென்பதையும், கட்பார் வைக்குரிய கண்ணடி முதலிய பொருள்களையும், செய்கைப்பல், செயற்கைக்கண் முதலிய பொருள்களையும் இப்போது போதிய அளவு தருவித்திருக்கிறே னென்பதையும் இந்த வடமாகாணத்துள்ள மக்களுக்குத் தெரிவிப்பதோடு, என்னை அபிமானிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

யோசித்தற்குரிய நேரம் நாள்தோறும் ( காலை 9 மணிதொடக்கம் 12 வரை / மாலை 2 ,, 5 ,, )

Tst 28 11-7—10-10-47. **S. சார்ல்ஸ்பத்திராஜு.**

## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரேட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48

# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,3670**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திறகு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

**S. கனகசபை**
திருப்பர்.

Std. 14 20-11-46—20-11-17 (தி)

உ
சுகமயம்
முல்லைத்தீவு, குமாரபுரம்
ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமிகோவில்

# திருப்பணி விஞ்ஞாபனம்

இச் சுப்பிரமணியதலத்தின் தொன்மை, மகிமை என்னும் இவைகளைப் பற்றிச் சைவ மக்கள் பலர் அறிவர், சைவாபிமானிகள் காலந்தோறும் உதவிவரும் தருமப்பொருளைக் கொண்டே இத் திருக்கோவிலின் திருப்பணி நிறைவேறி வருகின்றது.

இப்பொழுதும் இத்திருக்கோவிலிலுள்ள விநாயகர் ஆலயத்தின் எஞ்சிய திருப்பணி திருமஞ்சனக் கிணறு ஸ்தம்பமண்டபம், மகாமண்டபத்தின் கிழக்கு தெற்கு வாசல்களுக்குக் கதவுகள்அமைத்தல், இரண்டுமண்டபங்களுக்கும் நிலத்திற்கு சீமன் கொங்கிறிற் இடுதல், வாகனசாலை களஞ்சியம் சுற்றுமதில் என்னும் இவைகளைச் செய்து நிறைவேற்றவேண்டி யிருப்பதால் தங்கள் தங்களாலியன்ற பொருள் உதவி, மேற்படி திருப்பணிகளை நிறைவேற்றிவைக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகிறேன்.

"போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்"

இங்ஙனம்,
குமாரபுரத் திருப்பணித் தொண்டன்,
**கு. பரமசாமிக் குருக்கள்.**

Std 26—1-7-47 30 9-47

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்** - பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்**:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்**:- பார்க்கிளேஸ வங்கி.
**கிளைக்காரியாலயங்கள்**:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்**:- 242, ஆஸ்பத்திரிரேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு**:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்**:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10,000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு**:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்**:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று**:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி**:-
ஜீ. ஓ. எச். கட்டிடம் யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

( Std 29 1-8—30 7-48) (F)

## விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West: Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Tuesday, August, 19, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org